DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : O.S.No.201 / 2023 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 2 |
| Name | : பாண்டி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.03.2026. -----

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் 3ம் தரப்பினர். வா.சா.2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். எனது முதல் விசாரணைக்காக நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

1. வாதி, நான் மற்றும் எனது சகோதரர் ராஜேந்திரன் மீது 3ம் பிரதிவாதி மற்றும் அவரது மகன் தாவா சொத்து தொடர்பாக மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1ல் தாக்கல் செய்த அ.வ.150-2025 வழக்கின் பிராது நகல் வா.சா.ஆ.10.

2. வாதி, பிரதிவாதிகள் மற்றும் எனது இடத்தினை காட்டும் புல வரைபடம் கணினி நகல் வா.சா.ஆ.11.

3. எனது சொத்திற்கான பட்டா கணினி நகல் வா.சா.ஆ.12.

4. எனது சொத்திற்கான யுடிஆர் ஆ பதிவேடு நகல் வா.சா.ஆ.13.

5. எனது ஆதார் அடையாள அட்டை ஒளிநகல் வா.சா.ஆ.14.

6. எனது சொத்திற்கான ஆ பதிவேடு நகல் வா.சா.ஆ.15.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் ஜெயராஜ் நகரில் வசித்து வருகிறேன். 3ம் பிரதிவாதியை தெரியும். 3ம் பிரதிவாதிக்கும், எனக்கும் இடையே சிவில் வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு நிலுவையில் இருப்பதால் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வாதி அழைத்தார் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் கொடுத்த விஜயலட்சுமியை தெரியும். விஜயலட்சுமி, பிரதிவாதி ஜெயமாலாவுக்கு மருமகள் ஆவார். விஜயலட்சுமிக்கு வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஜெயமாலா, விஜயலட்சுமியின் கணவர் கொரோணா காலத்தில் உடல்நிலை மோசமானதாலும், வாரிசு இல்லாத காரணத்தினாலும் சொத்தை 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வி ஜயலட்சுமி, கருப்பாயிஅம்மாளுக்கு விற்பனை செய்தார். கருப்பாயிஅம்மாள் தாவா சொத்தை திவ்யாவிற்கும், திவ்யா தாவா சொத்தை அலெக்ஸ்க்கு விற்பனை செய்தார். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் பட்டா தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி மீது எந்தெந்த தேதிகளில் புகார் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகமில்லை. தாவா வழக்கு சொத்து அரசு நிலமாகவும், யாரும் அனுபவம் செய்யாமல் இருந்தாலும் அரசு நிலமற்றவர்களுக்கு தாவா சொத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்பு பட்டா வழங்கியுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் மழைக்காலங்களில் விளைச்சல் இல்லாததால் தாவா சொத்தை விட்டு சென்றுவிட்டதால் அங்கு அனுபவம் செய்தவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 1 ஏக்கர் அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்திருந்தார். நிரூபண வாக்குமூலத்தில் 1 ஏக்கரை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக தான் சொல்லியுள்ளேன். 5 சென்டு இடத்தில் 3 இடத்தில் தகர செட் அமைத்துள்ளார். 3ம் பிரதிவாதிக்கும், எனக்கும் இடையே முன்விரோதம் இருந்த காரணத்தினாலும் பொய்யாக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அலெக்ஸ் வீடானது செக்காணூரனியில் உள்ளது. அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது. பத்திர அலுவலகத்தில் இருப்பார். கருப்பாயிஅம்மாள் மற்றும் திவ்யா ஆகியோர்கள் கிரையம் செய்து கொடுத்த ஆவணங்கள் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அலெக்ஸ்பாண்டியன் வில்லங்க

சொத்துக்களை வாங்கும் தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ம.வி.இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.23 18:27:18 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.